தமிழ் நாடு பேரிடர்
அபாயக் குறைப்பு முகமை,
7 L NOV 2021
சேப்பாக்கம், சென்னை – 5

சுருக்கம்

பேரிடர் மேலாண்மை – இதர பேரிடர் – கடலூர் மாவட்டம் – 20.05.2021 அன்று ஏற்பட்ட மழை மற்றும் சூறாவளிக் காற்றினால் 33 விழுக்காடுக்கு மேல் சேதம் அடைந்த தோட்டக்கலைப் பயிர்களுக்கு நிவாரணத் தொகை வழங்குவது – மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.15,24,960/– நிதி ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை
பேரிடர் மேலாண்மை அலகு, பே.மே.3(2) பிரிவு

அரசாணை (நிலை) எண்.749 நாள் 16.11.2021
பிலவ–ஐப்பசி 30
திருவள்ளுவர் ஆண்டு, 2052

படிக்கப்பட்டது :

1. அரசாணை (நிலை) எண்.246, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை [பே.மே.III(2)] துறை நாள். 03.08.2017.
2. மாவட்ட ஆட்சியர், கடலூர் அவர்களின் ந.க.எண்.ஆ1/ 13900/2021, நாள். 31.05.2021.
3. இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சேப்பாக்கம் அவர்களின், கடித எண். பயிற்சி/6591/2020, நாள். 01.06.2021.
4. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கடித எண்.இ.பே–1/ 2349/2021, நாள் 08.09.2021.

----

ஆணை:

மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள், கடலூர் மாவட்டத்தில் 20.05.2021 அன்று ஏற்பட்ட மழை மற்றும் சூறாவளிக் காற்றினால் தோட்டக்கலைப் பயிர்கள் சேதம் அடைந்ததாகவும், அம்மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநருடன் கூட்டு புலத்தணிக்கை செய்து, 33 விழுக்காடுக்கு மேல் சேதம் அடைந்த பயிர்களை, படிவம் II–B–ல் பரிந்துரை செய்து நிவாரண தொகையாக ரூ.22,59,200/– மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்க கோரி கடலூர் மாவட்ட ஆட்சியரிடமிருந்து அறிக்கை வரப்பெற்றது எனவும், மேலும், மேற்காணும் கருத்துருவினை, இயக்குநர், தோட்டக்கலை (ம) மலைப்பயிர்கள் அவர்கள் பரிந்துரை செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

2. மேலும், கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில்,

வேளாண்மை, b(ii)ன் படி, சூறாவளிக் காற்றினால் பாதிக்கப்படும் தோட்டக்கலை மற்றும் மலைத்தோட்டப் பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.13500/-ம் மற்றும் நிலையான பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.18000/- வீதம் நிவாரணத் தொகையாக பாதிக்கப்பட்ட நபர்களுக்கு வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், மேற்படி நிவாரணத் தொகை ரூ.1000/-க்கு குறைவில்லாமல் இருத்தல் வேண்டும் எனவும் அரசால் ஆணையிடப்பட்டுள்ளது என்பதால் கடலூர் மாவட்டத்தில் சூறாவளிக் காற்றினால் பாதிக்கப்பட்ட பயிர் சேதங்களுக்கு இழப்பீடு வழங்க பின்வருமாறு கணக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்:-

| வ. எண் | வட்டம் / வட்டாரம் | பயிரிடப் பட்ட பரப்பளவு (ஹெக் டேரில்) | பாதிக்கப் பட்ட பரப்பளவு (ஹெக் டேரில்) | பாதிக்கப் பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை | மாவட்ட ஆட்சியர் (ம) இயக்குநர் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சேப்பாக்கம் அவர்களின் பரிந்துரையின் படி நிவாரண தொகை விவரம் (ரூ.) (ஹெக்டேருக்கு ரூ.20000/-) ((4) X 20000 ) | அரசாணை (நிலை) எண்.246, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை பிரிவு பே.மே III (2) நாள். 03.08.2017-ன் படி மாநில பேரிடர் நிவாரண நிதியின்படி பரிந்துரை செய்யப்படும் தொகை (ஹெக்டேருக்கு ரூ.13500/-) ((4) X 13500) |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 1 | கடலூர் | 150.660 | 52.660 | 242 | 10,53,200 | 7,10,910 |
| 2 | அண்ணாகிராமம் | 78.00 | 48.600 | 116 | 9,72,000 | 6,56,100 |
| 3 | குமராட்சி | 9.910 | 8.700 | 26 | 1,74,000 | 1,17,450 |
| 4 | பண்ருட்டி | 5.960 | 3.00 | 15 | 60,000 | 40500 |
| | மொத்தம் | 244.53 | 112.96 | 399 | 22,59,200 | 15,24,960 |

3. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 29.05.2021 நாளிட்ட செய்தி வெளியீட்டு அறிக்கையின்படி, யாஸ் புயலால் பாதிப்புகள் ஏற்பட்ட கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மட்டும் நிவாரணம் வழங்கும் விதமாக பின்வருமாறு அறிக்கை வெளியிடப்பட்டது:-

**"மானாவரி மற்றும் நீர்பாசனம் பெற்ற நெற்பயிர்களுக்கும், நீர்பாசன வசதி பெற்ற இதர பயிர்களுக்கும் இடுபொருள் நிவாரணத் தொகையாக ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.20 ஆயிரமும், மானாவரி நெற்பயிர் தவிர, அனைத்து மானாவரி பயிர்களுக்கும் இடுபொருள் நிவாரணத் தொகையாக ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ. 10 ஆயிரமும், பல்லாண்டு கால பயிர்களுக்கு (Perennial crops) இடுபொருள் நிவாரணத் தொகையாக ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.25 ஆயிரம் வழங்கிடவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு அறிவிக்கப்பட்ட நிவாரணத் தொகையினை தாமதமின்றி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் தொடர்புடைய அலுவலர்களுக்கு உத்தரவிட்டுள்ளேன்".**

எனவே, கடலூர் மாவட்டத்தில் 20.05.2021 அன்று ஏற்பட்ட சூறாவளிக் காற்றினால் சேதம் அடைந்த பகுதிகளுக்கு நிவாரணத் தொகை வழங்குவதற்கு அம்மாவட்ட ஆட்சியரின் முன்மொழிவுகள், இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சேப்பாக்கம், சென்னை அவர்களின் பரிந்துரை மற்றும் அரசாணை (நிலை) எண்.246, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை, நாள் 03.08.2017-ல் வேளாண்மை, b(ii) ஆகியவற்றினை, அடிப்படையாகக் கொண்டு ரூ.15,24,960/- (ரூபாய் பதினைந்து இலட்சத்து இருபத்து நான்காயிரத்து தொள்ளாயிரத்து அறுபது மட்டும்) மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்தும்

மற்றும் ரூ.7,34,240/- (ரூபாய் ஏழு இலட்சத்து முப்பத்தி நான்காயிரத்து இருநூற்று நாற்பது மட்டும்) மாநில நிதியிலிருந்தும் ஆக மொத்தம் ரூ.22,59,200/- (இருபத்து இரண்டு இலட்சத்து ஐம்பத்து ஒன்பதாயிரத்து இருநூறு மட்டும்) உரிய பயனாளிகளுக்கு பின்வருமாறு நிவாரணம் வழங்க ஏதுவாக, கடலூர் மாவட்ட ஆட்சியருக்கு நிதி ஒதுக்கீடு செய்யுமாறு கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள், அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்:-

| வ. எண் | வட்டம் / வட்டாரம் | பயிரிடப் பட்ட பரப்பளவு (ஹெக் டேரில்) | பாதிக்கப் பட்ட பரப்பளவு (ஹெக் டேரில்) | பாதிக்கப் பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை | மாவட்ட ஆட்சியர் (ம) இயக்குநர் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, சேப்பாக்கம் அவர்களின் பரிந்துரையின்படி நிவாரண தொகை விவரம் (ரூ.) (ஹெக்டேருக்கு ரூ.20000/-) ((4) X 20000) | அரசாணை (நிலை) எண்.246, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை பிரிவு பே.மே III (2) நாள். 03.08.2017-ன் படி மாநில பேரிடர் நிவாரண நிதியின்படி பரிந்துரை செய்யப்படும் தொகை (ஹெக்டேருக்கு ரூ.13500/-) ((4) X 13500) | மாநில நிதியிலிருந்து பரிந்துரை செய்யப்படும் தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| 1 | கடலூர் | 150.660 | 52.660 | 242 | 10,53,200 | 7,10,910 | 3,42,290 |
| 2 | அண்ணாகிராமம் | 78.00 | 48.600 | 116 | 9,72,000 | 6,56,100 | 3,15,900 |
| 3 | குமராட்சி | 9.910 | 8.700 | 26 | 1,74,000 | 1,17,450 | 56,550 |
| 4 | பண்ருட்டி | 5.960 | 3.00 | 15 | 60,000 | 40500 | 19,500 |
| | மொத்தம் | 244.53 | 112.96 | 399 | 22,59,200 | 15,24,960 | 7,34,240 |

4. மேற்காணும் கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்களின் கருத்துருவினை பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்றும் மற்றும் மாநில செயற்குழுவிடமிருந்து பெறப்பட்ட ஒப்புதல் அடிப்படையிலும், கடலூர் மாவட்டத்தில், 20.05.2021 அன்று ஏற்பட்ட மழை மற்றும் சூறாவளிக் காற்றினால் 33 விழுக்காடுக்கு மேல் சேதம் அடைந்த தோட்டக்கலைப் பயிர்களுக்கு நிவாரணத் தொகை வழங்க ஏதுவாக, மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.15,24,960/- (ரூபாய் பதினைந்து இலட்சத்து இருபத்து நான்காயிரத்து தொள்ளாயிரத்து அறுபது மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி-4ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

> "2245 இயற்கை சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு - 02 வெள்ளம், புயல் முதலியவை - 800 ஏனைய செலவு-மாநிலச் செலவினங்கள் - BH வெள்ளம் பாதித்த பகுதிகளில் உள்ள தோட்டக்கலை பயிர்கள் சேதமுற்றதற்கு உழவர்களுக்கு நிவாரண நடவடிக்கைகள் - 311 மானியங்கள் - 01 தனித்திட்ட மானியம்"
> (IFHRMS ததொகு 2245 02 800 BH 31101)

6. மேலே பத்தி-4ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்திற்கான நிதியொதுக்கம் ரூ.15,24,960/-, 2021-2022 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும், மேற்கண்ட செலவினத்திற்கு 2021-2022 ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும்.

அத்தகைய ஒதுக்கீட்டை எதிர்நோக்கி, மேலே பத்தி-4ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை பெற்று வழங்க கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையருக்கு அதிகாரமளிக்கப்படுகிறது. மேலும், இச்செலவினத்தை 2021-2022 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருக்களை உரிய நேரத்தில் நிதி (வருவாய்/வ.செ.பொ-I) துறைக்கு அனுப்புமாறு கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை, நிதி (வருவாய்) துறையின் அ.சா.எண்.47559/2021, நாள் 12.11.2021ல் பெறப்பட்ட இசைவுடனும், கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.794 (எழுநூற்று தொண்ணூற்று நான்கு)இன் படியும் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

குமார் ஜயந்த்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை-600 005.
இயக்குநர், பேரிடர் மேலாண்மை, தமிழ்நாடு பேரிடர் அபாய தணிப்பு முகமை, சேப்பாக்கம், சென்னை-600 005.
மாவட்ட ஆட்சியர், கடலூர்.
மாவட்ட கருவூல அலுவலர், கடலூர்.
முதன்மை கணக்காயர், சென்னை-600 018.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை-600 008.

நகல்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை, சென்னை-600 009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், பொதுப்பணித் துறை,
சென்னை-600 009.
அரசு முதன்மைச் செயலாளர், நிதித் துறை, சென்னை-600 009.
அரசு முதன்மைச் செயலாளர், நெடுஞ்சாலை மற்றும்
சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை-600 009.
இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை,
சேப்பாக்கம், சென்னை-600 005.
தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர், தலைமைச் செயலகம், சென்னை-600 009.
அரசு முதன்மைச் செயலாளர் அவர்கள் முதுநிலை தனிச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, சென்னை-600 009.
நிதி (வருவாய்/வ.செ.-1/வ.செ.-2/வ.வ.1/வே(ம)உ.ந) துறை,
சென்னை-600 009.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை (அநமு-II)த் துறை, சென்னை-600 009.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

16.11.2021
பிரிவு அலுவலர்.